# CHRISTIAN FEDERATION OF MALAYSIA
# (PERSEKUTUAN KRISTIAN MALAYSIA)

***Address: 10, Jalan 11/9, Section 11, 46200 Petaling Jaya, Selangor Darul Ehsan, Malaysia***
***Telephone: (03) 7957 1278, (03) 7957 1463, Fax: (03) 7957 1457***
***Email: cfmsia@yahoo.co.uk***


18 July 2012

***வருகின்ற 13ஆம் பொதுத் தேர்தலிற்கு மலேசிய கிறிஸ்தவ பெடரேஷனின் அறிக்கை***

***ஞானமாக வாக்களியுங்கள்***
***மலேசியாவை மேன்மையான நாடாக்க வாக்களியுங்கள்***

*பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகமான ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் , ஆதாமிற்கு தேவன் வெவ்வேறான இரண்டு அதிகாரங்களை அளித்துள்ளார் . பூமியின் மேலும், அதில் வாழும் அனைத்தின் மேலும் ஆளுகை செய்யவும் அதிகாரம் அளித்துள்ளார். புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகமான மத்தேயு சுவிசேஷத்தின் 5ஆம் அதிகாரம் , வசனங்கள் 13-15 வரை நாம் வாசிக்கும் பொழுது, கிறிஸ்தவர்கள் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கும்படி கூறப்பட்டுள்ளது.*

*இந்த இரு பகுதிகளையும் பரிசுத்த வேதாகமத்தில் உல்ல மற்ற பகுதிகளையும் நான் காணும் பொழுது, கிறிஸ்தவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாத ஒரு முடிவை சுட்டிக் காண்பிக்கிறது. கிறிஸ்தவர்கள் பாதுகாக்கவும், பூமியையும், அதில் வாழும் யாவையும் பராமரிக்கும் ஒரு பொறுப்பையும் தேவன் அளித்துள்ளார். கிறிஸ்தவர்களுக்கு தலைமைத்துவ உரிமை மட்டும் அளிக்கப்படாமல் , உக்கிராணத்துவமும் அளிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டின் நிலைமையைக் காண்கையில், மற்ற குடிமக்களைப் போல் கிறிஸ்தவர்களுக்கும் ஜனநாயக செயல்பாடுகளில் பங்கு பெறும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமையை நாம் பயன்படுத்தும் பொழுது, ஞானமாகவும், பொறுப்புணர்வுடனும் பயன் படுத்த வேண்டும்.*

*மலேசிய கிறிஸ்தவ பெடரேஷன் அனைத்து கிறிஸ்தவர்களையும் , அவர்களின் அரசாங்க உரிமைகளான வாக்களிப்பையும், வாக்களிக்கும் அதிகாரத்தையும், பாரபட்சமற்ற - நீதியை நிலைநாட்டும் ஒரு அரசாங்கத்தை - நமது நாட்டின் நலனைப் பேணிக் காக்கும் ஒரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும்படி அழைத்து ஊக்குவிக்கிறது.*

*ஜனநாயகத்தின் அடிப்படை முக்கியத்துவம் யாதெனில், நாட்டின் குடிமக்கள் அவர்களின் வாக்களிக்கும் அதிகாரத்தை உபயோகிப்பதாகும். அந்த அதிகாரத்தை உபயோகிக்காமல் இருப்பது வீணான செயல். வாக்களிப்பதினால், ஒவ்வொரு மலேசிய பிரஜையும், வரப்போகும் தலைமுறைகளுக்கு நீதியையும், சமத்துவத்தையும் அளிக்கும் ஒரு மலேசியாவை உருவாக்குகின்றனர்.*

*எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த நாட்டின் பிரஜைகளாக வாக்களிப்பதன் மூலம், நமது பணியை செய்ய வேண்டியது மிகவும் அவசியம். மேலும், நாம் காண விரும்பும் மேன்மையான மலேசியாவை , நாம் தேர்ந்தெடுக்கும் அரசாங்கத்தின் மூலம் மட்டுமே காண முடியும்.*

***மேன்மையான மலேசியாவைக்காண, மலேசிய கிறிஸ்தவ பெடரேஷன் கீழ்க்காணும் முக்கியங்களை நாம் யோசிக்கும்படி நம்மை ஊக்குவிக்கின்றது.***

- *தனி மனிதனின் சுய மரியாதையை மதிக்கும் ஒரு நாடாக நம் நாடு திகழ வேண்டும். அவ்வாறு திகழ வேண்டுமெனில், அந்த நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களும் ஒருமைப்பாடுடனும், சம உரிமையுடனும் நடத்தப்பட்டு, நாட்டின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படாமல் இருக்கும் போழுது தான் அந்த நாடு தன் மக்களை நல்ல புரிந்துணர்வுடனும், உண்மையுடனும், சம மரியாதையுடனும் நடத்த முடியும்.*
- *நாடு மதக் கொள்கைகளின் அதிக பட்சத்தை நிராகரிக்கவும், அதை தீவீரமாக அழிக்கவும் வேண்டும். இனம், மதம் இவைகளைக் குறித்ததான சகிப்புத் தன்மை இன்மை, உண்மையற்ற செய்திகளையும், தந்திர செயல்களையும் , சமூகத்திலும் அரசாங்கத்திலும், ஊடகங்கள், செய்தித்தாள்களில் பரப்புவதையும் உடனடியாக நிறுத்த வோண்டும்*

- ஊழல்கள் இல்லாத ஒரு நாடாகவும், பொது நிறுவனங்களிலும், மற்ற இடங்களிலும் பணி புரியும் தொழிலாளிகள் / அதிகாரிகள் யாவரும் நல் ஒழுக்கங்களைக் கொண்டவர்களாகவும் , உண்மை உள்ளவர்களாகவும் , பொறுப்புள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

- பண்பாடு, கலாச்சாரம், மத நம்பிக்கை, நாட்டின் குடியுரிமைத் தகுதி இவைகளின் பாகுபாடு இன்றி, செல்வத்தை அனைவருக்கும் சரி சமமாக பகிர்ந்தளிக்கும் நாடாகவும், அனைவரையும் சரி சமமாக மதிக்கும் நாடாகவும் இருத்தல் அவசியம். ஒவ்வொரு குடிமகனும், சமுதாயமும், சமூக செயல்களில் ஈடுபாடுக் கொள்ளவும், முன்னேறவும், அதிகாரம் பெற்று , நேர்மையாகவும், சரியாகவும் முன்னேற அரசாங்கம் ஆதரவு அளிக்க வேண்டும். தேவையான இடங்களிலும், அவசியமான இடங்களிலும், பட்சபாதமின்றி, பாகுபாடற்ற, நியாயமான ஆதரவை அரசாங்கம் அளிக்க வேண்டும்.

- சுற்று சூழலிற்கு கவனம் செலுத்தும் நாடாகவும், அரசாங்க அதிகாரிகள், சுய லாபத்தைக் கருதாமல், சுற்று சூழலின் மேல் ஆர்வம் கொண்டு தீர்மானங்கள் எடுப்பவர்களாகவும், மேம்பாட்டிற்கு அத்தியாவசியமான ஆதரவை அளிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

- மொழியும், கல்வியும் அரசாங்க ஆதிக்கத்திலிருந்து பிரிக்கப்பட்ட நாடாக விளங்க வேண்டும்.

- மக்கள் அனைவரும் மனிதர்களாக எண்ணப்பட்டு, மதிக்கப்பட்டு, சமூக அந்தஸ்து, கல்வி, அரசாங்க நம்பிக்கை , இனம், மத பேதமின்றி ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது நிறுத்தப்பட்டு, ஏற்றத் தாழ்வு அற்ற தன்மை காணப்படாத ஒரு நாடாக நம் நாடு விளங்க வேண்டும்.

- நாட்டிலே மத சுதந்திரம் நிலவவும், மக்கள் மத உரிமைப் பெற்று, தங்கள் மதத்தை பின்பற்றவும், செயல்படுத்தவும், பறை சாற்றவும், சட்டத்தின் மூலம் மதத்தை பரவ விடாமல் தடுப்பதை நிறுத்தும் நாடாகத் திகழ வேண்டும்.

13ஆம் பொதுத் தேர்தலில் சிறந்த தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட, கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்படி மலேசிய கிறிஸ்தவ பெடரேஷன் ஊக்குவிக்கிறது. மேற்காணப்படும் தகுதிகள் பெற்றவர்கள் மட்டும் அல்லாது, நமது நாட்டின் மீதும், அதன் மக்கள் மீதும், ஆர்வம் கொண்டவர்களாகவும், இது மட்டுமே தங்களின் முதலும், மேலான முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

மலேசியர்கள் இன்று, சிறப்பாக கல்வி கற்றவர்களாகவும், அரசாங்கத்தையும், சமூகத்தையும் நன்கு அறிந்தவர்களாகவும், சரித்திரத்திலே என்றும் காணாதபடி, இன்று அதிகம் பிரயாணம் செய்பவர்களாகவும் இருப்பதால், அதிக அறிவுடையவர்களாகவும், அனுபவம் மிக்க மக்களாகவும் இருக்கின்றனர்.

அனைத்து மலேசியர்களும், இந்த நாட்டில் வாழும்படி, இதனைத் தெரிந்துக் கொண்டவர்களும், வளத்துடனும், ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும், நீதியுடனும் வாழ மக்கள் தங்களின் வாக்களிக்கும் உரிமையை ஞானமாகப் பயன்படுத்தும்படி போதிப்பதில், திருச்சபைக்கு ஒரு பெரிய பொறுப்பு உண்டு.

தேவக்கிருபையும், சமாதானமும் உங்களுடன் இருப்பதாக !



பேராயர். டத்தோ ங் மூன் ஹிங்

&

மலேசிய கிறிஸ்தவ பெடரேஷன் செயற்குழு அங்கத்தினர்கள்.